


10. 09. 2025

தலைப்பு செய்திகள்

- இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக பேச்சுவார்த்தைகள் மூலம் இருநாடுகளின் நட்புறவு மேலும் வலுப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- நேபாளத்திற்கு தற்போது செல்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டுமென்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.
- மனநல பிரச்சனைகளில் உள்ளோரை அக்கறையுடன் அணுகி மீட்டெடுப்பதன் அவசியத்தை மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வலியுறுத்தியுள்ளார்.
- தமிழ்நாட்டில் விடுபட்ட தகுதிவாய்ந்த மகளிருக்கு இன்னும் இரண்டு மாதங்களில் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.
- ஆசியகோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் குரூப் - A பிரிவில் இந்தியா இன்றிரவு ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தியாவும், அமெரிக்காவும் நெருங்கிய நட்புறவு நாடுகளாக திகழ்வதோடு இயற்கையான ஒத்துழைப்பு பங்களிப்பு நாடுகளாகும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கிடையிலான வர்த்தக பேச்சுவார்த்தைகள் மூலம் இருநாடுகளின் பங்களிப்பு திறன் மேலும வலுப்படும் என்று கூறியுள்ளார்.

இந்த வர்த்தக பேச்சுவார்த்தைகள் விரைவில் முடிவடையும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் உடனான பேச்சுவார்த்தைகளை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக குறிப்பிட்டார்.

இரு நாடுகளின் வளமான பாதுகாப்பான பிரகாசமான எதிர்காலத்திற்காக அதிபர் ட்ரம்புடன் இணைந்து செலாற்ற இருப்பதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

முன்னதாக இந்தியா - அமெரிக்கா இடையிலான வர்த்தக தடைகளை களைய இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖❖

நேபாளம்

நேபாளத்தில் நெருக்கடி நிலை உருவானதை தொடர்ந்து பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் மத்திய பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சரவை கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

நேபாளத்தின் வன்முறைகள் குறித்து கவலை வெளியிட்டுள்ள பிரதமர், அந்நாட்டில் அமைதி திரும்ப அங்குள்ள மக்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று கோரினார்.

இதனிடையே நேபாளத்திற்கு தற்போது செல்வதை இந்தியர்கள் ஒத்திபோட வேண்டுமென்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது.

தற்போது நேபாளத்தில் உள்ள இந்தியர்கள் தங்கள் வசிப்பிடங்களிலேயே இருக்குமாறும், வீதிகளுக்கு செல்வதை தவிர்க்க வேண்டுமென்றும் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

காட்மாண்டுவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் நேபாளத்தில் உள்ள உயரதிகாரிகளின் அறிவுறுத்தல்களை அங்குள்ள இந்தியர்கள் செவிமடுத்து, அதற்கேற்ப செயலாற்ற வேண்டுமென மத்திய அரசு கோரியுள்ளது.

உதவி தேவைப்படுபவர்கள் காட்மாண்டுவில் உள்ள இந்திய தூதரகத்தை அணுகுமாறும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

இதனிடையே நேபாளத்தை ஒட்டியுள்ள உத்திரபிரதேச மாநிலத்தின் பல்வேறு மாவட்ட எல்லைப் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை அம்மாநில அரசு முடுக்கிவிட்டுள்ளது.

எல்லைப்பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்த கூடுதல் காவல்துறையினரும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

உலக தற்கொலை தடுப்பு தினம்

உலக தற்கொலை தடுப்புதினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

தற்கொலை எண்ணத்துடன், அமைதியான போராட்டத்தில் உள்ளவர்களுக்கு அண்மையும், அக்கறையும் தேவை என்பதை இத்தினம் நமக்கு உணர்த்துவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

மனவலியில் உள்ள இத்தகையோரை நாம் மீட்டெடுக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

“தற்கொலை விவரிப்பை மாற்றுவது” என்ற இந்த ஆண்டின் கருப்பொருள், மனகவலைகளை குறைத்தல், தேவையானோருக்கு தோள்நிற்பதன் அவசியத்தை விரிவாக எடுத்துரைப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அன்புடனும், புரிதலுடனும், பாதுகாப்பான நம்பிக்கையான உலகை அனைவருக்கும் நாம் உருவாக்கி தரமுடியும் என்று திரு.ஜே.பி. நட்டா கூறியுள்ளார்.

இத்தினத்தையொட்டி தேசிய மனநலம் சார்ந்த பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

சர்வதேச அளவில் ஆண்டுதோறும் 7 லட்சத்து 20 ஆயிரம் பேர் தற்கொலையால் உயிரிழப்பதாக தரவுகள் தெரிவிக்கும் நிலையில், இவற்றை தடுப்பதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மனநலம் சார்ந்த சுகாதார துறைகள் முனைப்புடன் மேற்கொண்டு வருகின்றன.

நெல்லை வண்ணாரப்பேட்டையில் நடைபெற்ற தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான கல்லூரி மாணாக்கர் பங்கேற்று இதுதொடர்பான துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள்.

நாமக்கல்லில் தற்கொலை தடுப்புதின பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. துர்காமூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

விழிப்புணர்வு பதாகைகளுடன் ஏராளமான பள்ளி கல்லூரி மாணாக்கர் இதில் பங்கேற்றனர்.

❖❖❖❖❖❖❖❖

ஜீதேந்திர சிங்

ஓய்வூதியதாரர்களின் குறைதீர் பிரச்சனைகளை கையாளும்போது மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறையின் அவசியத்தை மத்திய ஊழியர் நலத்துறை அமைச்சர் டாக்டர் ஜீதேந்திர சிங் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று ஓய்வூதியதாரர் குறைதீநாள் கூட்டத்தில் பேசியஅவர், ஓய்வூதியதாரர்கள் குறிப்பாக மாற்றுத்திறனாளிகளின் பிரச்சனைகளை களைய சம்மந்தப்பட்ட துறைகள் உயர்முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இந்த குறைதீர்ப்பு முகாமிற்கு பின்னர் அவர்தம் பிரச்சனைகள் களையப்பட்டதை அதிகாரிகள் உறுதிசெய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விரைவான தீர்வுகளுக்கு அலுவலர்கள் செயலாற்ற வேண்டுமென தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖❖

சி.பி. ராதாகிருஷ்ணன்

2047-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த தேசமாக நம்நாடு உருவாக அர்ப்பணிப்புடன் செயலாற்ற குடியரசு துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. சி.பி.ராதாகிருஷ்ணன் உறுதிபூண்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் வெற்றிக்கு பின்னர் உரையாற்றிய அவர், தமது வெற்றி தேசிய கொள்கையின் அடிப்படையில் கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்டார்.

திரு. சி.பி.ராதாகிருஷ்ணனின் வெற்றியை தொடர்ந்து கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் பாரதிய ஜனதா கட்சியினர் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கி கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

சென்னையில் இன்று நடைபெற்ற காவலர் தின விழாவில் காவலர்களின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் ஏற்றுக்கொண்டார்.

முதலமைச்சர் தலைமையில் காவலர் தின உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

ஜி.எஸ்.டி.

மத்திய அரசின் அடுத்த தலைமுறையினருக்கான சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் வரும் 22-ம் தேதி நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், இதில் அறிவிக்கப்பட்ட 2 அடுக்கு வரி, வீட்டு உபயோக பொருட்களின் வரி குறைப்பு போன்ற நடவடிக்கைகளால் நாட்டின் பொருளாதாரம் உயரும் என்று திருச்சிராப்பள்ளி மத்திய சரக்கு மற்றும் சேவைவரி அலுவலக உதவி ஆணையர் திரு. D. சங்கர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

உதயநிதி

தமிழ்நாட்டில் விடுபட்ட தகுதிவாய்ந்த அனைத்து மகளிருக்கும் 2 மாதத்தில் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும் என துணைமுதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசியஅவர், மாநிலத்தில் இதுவரை ஒருகோடியே 15 லட்சம் மகளிர் உரிமைத்தொகை பெறுவதாக கூறினார்.

மகளிர் இலவச பேருந்தில் இதுவரை ஏராளமான பெண்கள் பயணித்து பயன்பெறுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

எ.வ.வேலு

கன்னியாகுமரி கடலில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கான பாலத்தில் கீறல் விழுந்த கண்ணாடி அகற்றப்பட்டு, புதியது போடப்பட்டுள்ளதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இதனைத் தெரிவித்த அவர், பராமரிப்பு பணிகளின் போது சுத்தியல் தவறி விழுந்ததால் சிறிய கீறல் ஏற்பட்டதாக குறிப்பிட்டார்.

இந்த பாலத்தை கட்டிய நிறுவனம் 10 ஆண்டுகள் இதனை பராமரிக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

MBBS, BDS

தமிழ்நாட்டில் இன்று தொடங்குவதாக இருந்த MBBS, BDS படிப்புகளுக்கான 2-ம் சுற்று கலந்தாய்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய மருத்துவ கலந்தாய்விற்கான தேதி நீட்டிக்கப்பட்டுள்ளதால் இந்நடவடிக்கை.

மாநில கலந்தாய்வின் 2-ம் சுற்று தொடங்குவதற்கான தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என மருத்துவ கல்வி ஆராய்ச்சி இயக்ககம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

TET

தமிழ்நாட்டில் ஆசிரியர் தகுதி தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான காலஅவகாசம் இன்று மாலையுடன் நிறைவடைகிறது.

வரும் நவம்பர் 15, 16-ம் தேதிகளில் இத்தேர்வு நடைபெறவுள்ள நிலையில் இதுவரை 3 லட்சத்து 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

உதகை வாய்ஸ்

உதகை அருகே கல்லட்டி மலைப்பாதையில் ராட்சத பாறை மற்றும் மரம் விழுந்ததால் அப்பகுதியில் போக்குவரத்து இன்று சிறிதுநேரம் பாதிக்கப்பட்டது.

மலையிலிருந்து வேகமாக உருண்டு வந்த பாறைகளால் தடுப்பு வேலிகளும், பெயர் பலகைகளும் சேதமடைந்தன.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

கள்ளக்குறிச்சியில் அஞ்சல்துறை சார்பாக ஊழல் எதிர்ப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. பிரசாந்த் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் தொடர்மழை காரணமாக 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணாக்கருக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சரவணன் அறிவித்துள்ளார்.

தேனி மாவட்டம் கும்பக்கரை அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் குளிக்க வனத்துறையினர் தடைவிதித்துள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

துபாயில் நடைபெறும் 17-வது ஆசியகோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியில் குரூப் - A பிரிவில் இந்தியா இன்றிரவு ஐக்கிய அரபு எமிரேட்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

சீன ஹாங்சூவில் நடைபெறும் 11-வது ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கி சூப்பர் 4 சுற்றில் இந்தியா இன்று தென்கொரியாவை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஹாங்காங் ஓப்பன் பேட்மிட்டன் மகளிர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு Rutaparna Panda, Swetaparna Panda இணை முன்னேறியுள்ளது.

முதல் சுற்றில் இந்த இணை - ஹாங்காங் இணையை 21 - 17, 21 - 9 என்ற நேர் செட்களில் இன்று வென்றது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖